# ★ வலிகாமத்தில் ராணுவத்தினர் விரட்டியடிப்பு

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 23 இதழ் 49
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 05 04 — 1993

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்றுக்காலை முன்னேறி வந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர். இத்தாக்குதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது.

நேற்றுக்காலை வலிகாமம்

(4ம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புக்களை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
வலி வடக்கு மேற்குப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் படையினர் நேற்றுக்காலை தொடக்கம் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தையும், ஷெல் தாக்குதல்களையும் தொடர்ச்சியாக நடாத்திய படியிருந்தனர்.

அளவெட்டி வடக்கு.

(4ம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் வடக்குப் பகுதியில் நேற்று இராணுவத்துடன் இடம் பெற்ற மோதலில் லெப். பெருந்தேவன் அல்லது மோகன் (சேனாதிராசா குணதாசன் சங்கிலியன் வீதி, நல்லூர்) என்ற போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

## ● காலிபூஸா தடுப்புமுகாமில்

# உண்ணாவிரதம் இருப்போரில்

# பலரின் உடல்நிலை கவலைக்கிடம்

## 7 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(கொழும்பு)
காலி பூஸா தடுப்பு முகாமில் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்போரில் நூற்றுக்கணக்கானோரின் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதுடன் இவர்களுள் 7 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## 'தடுத்துவைக்கப்பட்டோர் விடுதலைசெய்யப்படவேண்டும்'

(கொழும்பு)
மூன்று ஆண்டுகளுக்கு மேலாக விசாரணைகளின்றி தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை உடன் விடுதலை செய்ய வேண்டுமென மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் திரு. ஜே. எச். ஏ. சூசரபாது காப்புதுறை செயலருக்கு அவசர வேண்டுகோள் விடுத்தார்.

இவ்வேண்டுகோளுக்கு ஸ்ரீலங்கா பாதுகாப்புத்துறை செயலர் அனுப்பி வைத்த பதில் திருப்திகரமாக அமையவில்லையென மேற்படிஅமைப்பின் தலைவர் தெரிவித்ததாக பி. பி. சி. செய்தியாளர் தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-ரி)

## வெடிகுண்டு கடத்தல்சம்பவம் குற்றமற்ற இருவர் விடுதலை

### ஒருவர் மீது தொடர்ந்து விசாரணை

(யாழ்ப்பாணம்)
கற்பூரத்துண்டுகளின் நடுவே C-4 வெடிமருந்துகளை வைத்து பொதி செய்து சக்திவாய்ந்த வெடிகுண்டு ஒன்று வடபகுதிக்கு எடுத்துவரப்பட்ட சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்களின் விசாரணையின் பின்னர் இருவர் விடுதலை செய்யப்படுகின்றனர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டவர்களில் கந்தையா கோபாலகிருஷ்ணன் (கோபால், தொல்புரம், சுளிபுரம், யாழ்ப்பாணம்), இராசரட்ணம் ஜெயரட்ணம் (மாதா, இரண்டாம் வாய்க்கால், கோவிந்தன் கடைச் சந்தி, கிளிநொச்சி) ஆகிய இருவரும் குற்றமற்றவர்கள் என்றமுறையில் விடுதலைசெய்யப்படுகின்றார்கள் என்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

(3ம் பக்கம் பார்க்க)



கந்தசாமி



ஜெயரத்தினம்



கோபாலகிருஷ்ணன்

## தடுப்பு முகாம்களுக்கு அதிகாரிகள் குழு விஜயம்

(கொழும்பு)
காலி பூஸா, வெலிகந்தை, பல்லேகலை ஆகிய தடுப்பு முகாம்களுக்கு சர்வதேச செஞ்சிலுவை சங்க அதிகாரிகள், தடைசெய்யப்பட்டோர் பற்றி ஆராய சிறப்பு அதிகாரிகளை கொண்ட குழு நேரடி விஜயம் ஒன்றை மேற

(4-ம் பக்கம் பார்க்க)

## தடுப்புக் காவலில் 827 மட்டு. இளைஞர்

(கொழும்பு)
மட்டக்களப்பை சேர்ந்த 827 தமிழ் இளைஞர்கள் தென்னிலங்கை சிறைகளில்எதுவித விசாரணைகளும் இன்றி அடைத்து வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னார்படைமுகாம்களுக்கு அமைச்சர்குழு விஜயம்

(கொழும்பு)
பிரதி பாதுகாப்பு அமைச்சரும், மாகாண சபைகள் மற்றும் வெளிவிவகார ராஜாங்க அமைச்சருமான திரு. ஜோன் அமரதுங்க மற்றும் படைஉயர் அதிகாரிகள் ஆகியோரைக்

(3-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு உதவியதாக ஐந்து தமிழர்கள் கைது

(யாழ்ப்பாணம்)
கொழும்பு மருதானையில் உள்ள தனியார் பாத அணி உற்பத்தி நிலைய உரிமையாளர் உட்பட அங்கு தொழில் புரியும் ஐந்து தமிழர்கள் புலிகளுக்கு உதவி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த மாதம் 28-ம் திகதி மருதானைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. நியமனப்பத்திரம்; இன்று தாக்கல் செய்யும்

(கொழும்பு)
மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக ஐ. தே. க. இன்று தனது வேட்பாளர்களின் நியமனப்

(4ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (சா) பரீட்சை — 1992 யாழ். நகரபகுதி முன்னணி பாடசாலை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
1992 டிசம்பரில் நடைபெற்ற க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் குமண கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டு நேற்று மாலை வெளியிடப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**யசோ**

சித்திரம் ஆண்டு 11. தவணைப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றுத்தரும். பிரபலமான புத்தகசாலைகளிலே பரபரப்பாக விற்பனையாகின்றது. (இ-4051)

**பயிற்சி**

Basic, d Base III + Lotus 1, 2, 3, Word Processing பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Unikco Computer Center, 37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3020)

**தேவை**

கொரிலிக்ஸ், வீவா, போத்தல்கள் தேவை. றபர் மூடியுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd, No: 14, Seenier Lane, Jaffna. (A-3024)

**சேவை**

மக்கள் அபிமானத்தைப் பெற்ற ஸ்ரீலங்கா அச்சகம் ஸ்ரீலங்கா புத்தகசாலையுடன் இல்லாமல் தனித்தே இயங்குகின்றதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். ஸ்ரீகாந்தா அச்சக வேன், ராஜா தியேட்டர் அருகாமை - யாழ்ப்பாணம். (எ-3025)

## மிதிவண்டி சேவை

(யாழ்ப்பாணம்)

நோயாளர்களின் நலன் கருதி பூதவுடல் கொண்டு செல்லும் வகையில் உந்து மிதிவண்டிச் சேவை ஒன்றினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்த வண்டிக்கான முழுச் செலவையும் யாழ். லயன்ஸ் கழகம் பொறுப்பேற்றுள்ளது.

## இராசி பலன்

05-04-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு பங்குனி 23)

சதுர்த்தசி பி. இ. 3-20 வரை, உத்தரம் பி. இ. 2-37 வரை, சித்தயோகம் இராகு காலம் காலை 7-39 முதல் 9-09 வரை, சுபநேரம் நண்பகல் 12-09 முதல் 1-39 வரை.

மேடம்: தொழில் வகையில் புதிய போக்கு, நன்முயற்சி, பணவரவு.

இடபம்: வணக்குறைவால் சிறுநட்டம், உஷ்ணப்பிணி, வெறுப்பு.

மிதுனம்: இல்லத்து விசேடம், பந்தயங்களில் தோல்வி, யோசனை.

கடகம்: அவசர உதவி, கல்வியால் சிறப்பு, உத்தியோக நன்மை.

சிங்கம்: மனபேதம், தொழில் குழப்பம், காரியதாமதம்.

கன்னி: உறவினர் நன்மை, செய்தொழில் திருப்தி, கௌரவ செலவு.

துலாம்: கருத்து வேறுபாடு சத்துருக்கள் தொல்லை, பணமுடை.

விருச்சிகம்: தூரத்து சந்தோஷ செய்தி, குடும்ப சிறப்பு, அதிர்ஷ்டம்.

தனுசு: நன்முயற்சி, குடும்ப மகிழ்ச்சி, பொறுப்புக்களை ஏற்றல்.

மகரம்: இடப்பெயர்வு, தொழில் நஷ்டம், பணச்சிக்கல்.

கும்பம்: குடும்பத்தில் எதிர்ப்பு, உயர்மட்ட விரோதம், பயணதடை.

மீனம்: சகோதர நன்மை, அதிகாரிகள் பாராட்டு, இன்பவரவு.

— ஜோஸ்யர்.

---

நல்லூர் வடக்கு
ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தான
மகோற்சவகால

## தெய்வீகப் பேருரைகள்

காலம்: 06-04-93 செவ்வாய் முதல் 16-04-93 வெள்ளி வரை.
இரவு 8 00 மணி — 9-00 மணி.

பொருள்: ★ பெரியபுராணம் ★

நிகழ்த்துபவர்: திரு. த. சிவகுமாரன் அவர்கள்
(அமைப்பாளர், காரைநகர் கம்பன் கழகம்,
ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

தேவஸ்தான அறங்காவலர் சபை.

விளம்பர அன்பளிப்பு:
விநாயகர் விளையாட்டுக் கழகம்.

(இ-4063)

---

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



**தருமலிங்கம் ஜெயக்குமார்**

தோற்றம்: 8 - 12 - 1955 மறைவு: 5 - 4 - 1985

நேற்றிருந்தாய் இன்றில்லை மகனே!
நேற்றிருந்த சொந்தம் எங்கே தம்பி
பார்த்திருந்த காலமெல்லாம் பாசம் தந்தே
பரிதவிக்க வைத்தாயே மகனே
ஆர்த்தெழுந்து நமக்காக விண்ணகத்தில்
காத்திருக்கச் சென்றாயோ மகனே!


இவரது பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

"குமரஸ்தான்"
இணுவில் மேற்கு.

(இ-4068)

---

## 5ம் ஆண்டு நினைவு



**சஞ்சோ பிறிஜீற்றம்மா (சித்தம்மா)**

மலர்வு: 17-03-1917 உதிர்வு: 05-04-1988

"சீவியத்தில் என்னை நேசித்தீர்கள்
மரணத்தில் என்னை மறவாதீர்கள்"

ச. டோமினிக் சர்வே.

62/1, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-4066)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி செல்லையா நிமலினி**

மலர்வு: 09-10-1979 உதிர்வு: 05-04-1991

அன்பான நிமலினியே! நீ சென்று ஈராண்டாகுதம்மா
அழுது புலம்பும் நாம் இங்கே ஏங்குகின்றோம்
- உனை நினைத்தம்மா
அவனியில் வாழும்வரை உன் நினைவலைகள்
- எம் நெஞ்சில் நிலைக்குமம்மா

அப்பா, அம்மா,
சகோதரர்கள்: பாலா, பாலேந்திரா,
சுவர்ணா, யூலி.

சேச் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(ஏ-3029)

---

## திரு. சி. சிவசரவணபவன்

(சிற்பி)

## சேவை நலம் பாராட்டல்



வளமார்ந்த கவிதைப் புலமை, வண்மைசேர் எழுத்தாற்றல், சொல்லேர் வன்மை, என்றும் மாறாத இளநகை, எழுத்துலகம் "சிற்பி" எனச் செல்லமாக அழைக்கும் இத்தனைப் பெருமைக்கும் புகழுக்குமுரிய

திரு. சி. சிவசரவணபவன் அவர்கள்

வைத்தீஸ்வரக் கல்லூரியை மூலாதாரப் பாடசாலையாகக்கொண்டவர். தற்போது கொத்தணி அதிபராக இருந்து சேவையாற்றி இளைப்பாறியமையையொட்டி

**இன்று (5-4-93) திங்கட்கிழமை**

நண்பகல் 12-00 மணிக்கு வைத்தீஸ்வர கல்லூரி விவேகானந்த மண்டபத்தில் கௌரவிக்கப்படுகிறார்.

கல்வி வளங்குன்றிய பின்னணியைக்கொண்ட இக் கொத்தணியை நடாத்தும் தலைமைக் குண நலன்களின் தலையாய கல்விச் செழுமை வாய்ந்த அதிபராக கடந்த காலத்தில் செம்மையுற சேவையாற்றிய நலத்தினைப் பாராட்டி அன்னார் எதிர்காலத்தில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள்.
(வண். தெற்கு — கொத்தணி)

1993-04-05. (இ-4050)

# தமிழக ஆளுநர் பீஷ்மருடன் அ.தி.மு.க, தி.மு.க. சந்திப்பு

(சென்னை)

தமிழக சட்டப் பேரவை சரிவரச் செயல்பட அனுமதிக்கப்படவில்லை என அ. தி. மு. க. வினரும், தி. மு. க வினரும் தமிழக ஆளுநரைத் தனித்தனியே சந்தித்து முறையிட்டுள்ளனர்.

அவர்கள் நேற்றுமுன்தினம் ஆளுநர் பீஷ்மன் நாராயண சிங்கிடம் தமிழக சட்டசபையின் தற்போதைய பட்ஜட் கூட்டத் தொடரின் கசப்பான நிகழ்வுகள் குறித்துத் தங்கள் நிலையை எடுத்துக் கூறினர்.

அ. தி. மு. க. சார்பில் ஆளுநரைச் சந்தித்த குழுவில் அவை முதல்வரும், நிதி அமைச்சருமான இரா. நெடுஞ்செழியனும், ஆறு அமைச்சர்களும், பத்திற்கும் மேற்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களும் இடம்பெற்றிருந்தனர். இச்சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்றது.

சட்டப்பேரவையில் அண்மைக் காலங்களில் நடைபெறும் சம்பவங்கள் குறித்து ஆளுநரிடம் விளக்கிக் கூறியதாகவும் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி காங்கிரஸ் கட்சியினர் தினமும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்வதால் அலுவல்கள் பாதிக்கப்படுவது குறித்து எடுத்துக் கூறப்பட்டதாகவும் திரு. நெடுஞ்செழியன் கூறினார்.

ஆளுநரை காங்கிரஸ் கட்சியினர் கடந்த சில தினங்களுக்கு முன் சந்தித்துப் பல புகார்களை தெரிவித்ததை அடுத்தே தாங்களும் ஆளுநரைச் சந்தித்ததாக திரு. நெடுஞ்செழியன் கூறினார்.

தி மு. க. சார்பில் நேற்று முன்தினம் ஆளுநரை சந்தித்த குழுவினர் சட்டப் பேரவையின் பெருமையையும். நடு பெயரையும் காப்பாற்று மாறும் வன்முறை நிகழ்ச்சிகளைத் தவிர்க்குமாறும் பேரவைக்கு ஆளுநர் செய்தி அனுப்ப வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர்.

சட்டப் பேரவையில் பொது மக்களின் பிரச்னை குறித்துப் பயனுள்ள விவாதங்கள் ஏதும் நடைபெறவில்லை என்றும் ஆளும் கட்சியினரின் முரட்டுத்தனமான போக்கும் வன்முறைச் சம்பவங்களுமே நிகழ்ந்து கொண்டிருப்பதாகவும், சட்டப்பேரவையின் கௌரவத்தைப் பாதுகாக்கத் தமது அரசியல் சட்ட அதிகாரத்தை ஆளுநர் பயன்படுத்த வேண்டுமெனவும் கோரியுள்ளனர்

தி. மு. க, சார்பில் திரு. பொன். முத்துராமலிங்கம், ஆர்க்காடு திரு. வீரசாமி, முன்னாள் எம் பி திரு. என். வி. என். சோமு, எம். எல். ஏ. திரு. பரிதி இளம்வழுதி ஆகியோர் ஆளுநரைச் சந்தித்தனர். (இ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவ வைபவத்தையொட்டி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும், 7-ந் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும்.

0　0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலயம், அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயம், ஸ்ரீ மணியம்பதி அம்மன் ஐயனார் ஆலயம், வதிரி பீடவிநாயகர் ஆலயங்கள் யாவற்றிலும் இன்று திங்கட்கிழமை பங்குனி உத்தரம் தினத்தன்று விசேட அபிஷேகம் பூசை ஆராதனைவழிபாடுகளும் இடம்பெறவுள்ளது (154)

0　0

(கொழும்புத்துறை)

அரியாலை அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய சிவன் கோவில் வருடாந்த தேர்த் திருவிழா பங்குனி உத்தர தினமான இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு வசந்தமண்டப பூசையை அடுத்துத் தேர்த்திருவிழாவும் 6ம் திகதி செவ்வாய் காலை பூரணை தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (154)

0　0　0

(கொழும்புத்துறை)

பொலிகண்டி கிழக்கு பதுவனை அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தெய்வ விக்கிரகங்களுக்கு இன்று திங்கட்கிழமை பங்குனி உத்தரத் தினத்தன்று காலை 8-40 மணி முதல் 10-40 மணி வரையில் உள்ள சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா இடம்பெறவுள்ளது. (154)

0　0

(கிளிநொச்சி)

சரித்திரப் பிரசித்திபெற்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் இன்றுதிங்கள் நாளைசெவ்வாய் ஆகிய இரு தினங்களிலும்வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

நாட்டுநிலைமை காரணமாக பண்டம் எடுக்கும் வைபவம் கோவில் வீதியிலே இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (83)

0　0　0

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதி க. பொ. த (உயர்) தர வகுப்பு விஞ்ஞான மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கொன்று இன்று பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை தலைமையில் நடைபெறுகின்றது. இக்கருத்தரங்கிலே கலாநிதி எஸ். சிவபாலன், கலாநிதி கே. கந்தசாமி கலாநிதி எஸ். ஸ்ரீசற்குணராசா ஆகியோர் கருத்துரைகளை வழங்குகின்றனர். (52)

0　0

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் பங்குனி உத்தர நவோத்திர 1009 சங்காபிஷேகம் இன்று திங்கள் காலை 8 மணிக்கும். நண்பகல் அன்னதானமும் மாலை அம்பாள் தெருவீதி உலா வருதலும் நடைபெறும்.

நாளை மாலை 5 மணிக்கு பங்குனி பூரணை திருவிளக்குப் பூசையும் அம்பாள் தெருவீதி உலா வருதலும் நடைபெறும்.

# க. பொ. த. (உ|த) வகுப்பு

## ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(திருநெல்வேலி)

தேசிய கல்வி நிறுவனமும் கல்வித்திணைக்களமும் இணைந்து யாழ் பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் க. பொ த. (உ/த) பாடத்திட்டத்திற்கான பௌதீகம், விலங்கியல். தூய பிரயோக கணிதம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகளை நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றன. இக்கருத்தரங்கில் க. பொ. த. (உ/த) வகுப்பில் மேற்படி பாடங்களை கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விலங்கியல், ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று 5 ம் திகதி தொடக்கம் 10 ம் திகதி வரை யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திலும், பௌதீகம் எதிர்வரும் 8 ம் திகதி யாழ் பல்கலைக்கழக பௌதீகத் துறையிலும், கணிதம் இம்மாதம் 28 ம் திகதி தொடக்கம் மே மாதம் 1 ம் திகதி வரையும் யாழ் பல்கலைக்கழக கணித புள்ளி விபரத்துறையிலும் நடைபெறும். (157,159)

வெளிநாடுகளின் நிதி உதவியில்

## சிங்கள பகுதிகள் அபிவிருத்தி வடக்கு கிழக்கு புறக்கணிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு உட்பட இலங்கை முழுவதிற்குமான அபிவிருத்தித் திட்டத்திற்கென வெளிநாடுகளால் வழங்கப்பட்ட 476 கோடி ரூபாவும் சிங்களப் பகுதிகளின் அபிவிருத்திக்காகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் போர் நடைபெற்று வருவதால் அப்பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளமுடியாது எனக் கூறி இப்பகுதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதோடு ஒதுக்கப்பட்ட பணமும் ஏனைய சிங்களப் பகுதிகளின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஜெர்மன், நெதர்லாந்து ஆகிய நாடுகளும், ஆசிய அபிவிருத்திவங்கி, சீடா நிறுவனம் ஆகிய அமைப்புகளும் இந் நிதியை வழங்கியுள்ளன.

ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் வடக்கு-கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கிராம அபிவிருத்திப் பணிகளில் அரசு ஈடுபட்டுவருகிறது. (வி)

# வெடிகுண்டு கடத்தல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. கந்தையா கோபாலகிருஷ்ணன் இச்சம்பவங்களின் முழுவிபரமும் தெரியாமல், அதிகஇலாபம் ஈட்டும் வியாபாரம் என்ற போர்வையில் உளவாளிகளால் பயன்படுத்தப்பட்ட பொதுமகன் எனத் தெரியவருகிறது. இவ் வெடிகுண்டின் தன்மையினையும் ஆபத்தினையும் தெரிந்துகொண்டு அப்பொருட்களை உடபகுதிக்கு உள்எடுத்துவருவதில் நேரடியாக சம்பந்தப்பட்டவரான மரிமுத்து கந்தசாமி (கந்தன், வயது 42) பெண்டிக்கோஸ் வீதி, குசைப் பிள்ளையார்குளம், வவுனியா) என்பவர் தொடர்ந்து விசாரணைக்கு உள்ளாகி வருகின்றார்.

இச்செய்தியானது முதலில் வெளியிடப்பட்டபோது வெடிபொருள் இருந்து எடுத்த இடம் வட்டக்கச்சி என தவறுதலாக வெளியிடப்பட்டுவிட்டது. உண்மையில் வட்டக்கச்சி பிரதான வீதியிலுள்ள கோவிந்தன் கடைச்சந்தி இரண்டாம் வாய்க்கால் என்ற கிராமத்தில் உள்ள இராசரத்தினம் ஜெயரத்தினம் (மாதா) என்பவரது வீட்டிலேயே குறிப்பிட்ட வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட இராசரத்தினம் ஜெயரத்தினம் (மாதா) கிளிநொச்சிக்கும் ஓமந்தைக்குமிடையே வழமையான வாடகைக்கு மோட்டார் சைக்கிள் ஓடுபவராக தொழில் செய்து வந்தவர் வியாபாரிகள் என்ற போர்வையில் அவருடன் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட கந்தசாமியும் மற்றவரும் அவரது குடும்ப நண்பர் என்ற அளவிற்கு தொடர்பினை நெருக்கமாக்கிக் கொண்டனர்.

தனது பொருட்களை கிளிநொச்சியில் விற்பதால் அதிக இலாபம் கிடைக்காது என்றும் இலநதிகள் கழித்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லும்வரை அங்கேயே இருக்கட்டும் என்று கூறி அப்பொருட்களை இராசரத்தினம் ஜெயரத்தினம் (மாதா) என்பவரிடம் ஒப்படைத்துவிட்டு திரும்பிச்சென்றனர். குறிப்பிட்ட மாதா பொருட்கள் அடங்கிய பையினை திறந்து பார்த்தாராயினும் அவரால் வெடிமருந்து அடையாளம் காணமுடியவில்லை. வெடிமருந்து மணமற்ற வெள்ளை நிறமான C-4 ரகத்தைச் சேர்ந்தது என்பதனாலும் அது கவனமாக கற்பூரத்துக்குள் சேர்த்து பொதிசெய்யப்பட்டு காவடி மார்க் கற்பூர அடையாள லேபல்களினுள் ஒட்டப்பட்டு இருந்ததினால் அவரால் அதை வித்தியாசமாக அடையாளம்காண முடியாமற் போய்விட்டது.

மேற்கண்ட விடயங்கள் குறிப்பிடப்பட்ட அனைவரையும் விசாரணை செய்ததன் மூலம் அறியக்கூடியதாக உள்ளது: விசாரணைதொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இவ்விடயத்தினை உற்று நோக்கும் போது இராசரட்ணம் ஜெயரட்ணம் (மாதா) கந்தையா கோபாலகிருஷ்ணன் (கோபால்) ஆகிய இருவரும் அதிக வருவாய் கிடைக்கும் என்ற நப்பாசையினால் இந்த வஞ்சகர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்பது தெரியவருகின்றது.

உளவாளிகள் பற்றி எமது மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என அறிவுத் தருவதுடன் மாதா கோபால் ஆகியோரது அனுபவங்கள் எமது மக்களுக்கு நல்லபாடமாக அமைய வேண்டும் எனவும் மக்கள் இதுவிடயமாக விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் விடுதலைப்புலிகளால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (வி)

# கம்பன் விழா

## இறுதி நாள் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் 'கம்பன் விழாவின்' 5ம் நாள் - இறுதி நாள் நிகழ்ச்சி நாளை செவ்வாய் காலை 9-30 மணிக்கு ஆரம்பமாகும். திரு. அநு. வை நாகராஜன் தலைமையுரையையும் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா தொடக்கவுரையையும் நிகழ்த்துவர்.

இதையடுத்து இலக்கண வித்தகர் இ நமசிவாயதேசிகர் தலைமையில் 'ஆய்வரங்கு' நடைபெறும். 'வடமொழி அணிகளைக் கடந்த கம்பன்' எனும் தலைப்பில் பண்டிதர் க. சச்சிதானந்தம் ஆய்வுரை நிகழ்த்துவார். கருத்துரைகளை கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், திரு. இ. முருகையன் நிகழ்த்துவர்.

மாலை நிகழ்ச்சிகள் 4-30 மணிக்கு ஆரம்பமாகும். மங்கள இசையை தொடர்ந்து தலைமையுரையை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரனும், தொடக்கவுரையை திரு. சு. சிவகலாலாவும் நிகழ்த்துவர். நிறைவுரையை பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் நிகழ்த்துவார்.

இதையடுத்து 'மேன்முறையீட்டு பட்டிமண்டபம்' இடம்பெறும், முதல்நாள் பட்டிமண்டப தீர்ப்பினை எதிர்த்து மேன் முறையீடு' நடைபெறும். திருவாளர்கள் பொன். கணேசமூர்த்தி, இ. ஜெயராஜ், சோ. பத்மநாதன் ஆகியோர் முத்தரப்பு வாதிகளாக வாதிடுவர்.

தொடர்ந்து கலாவிநோதன் சின்னமணி குழுவினரின் 'சீதா கல்யாணம்' 'வில்லிசை' இடம்பெறும். (இ)

## தவக்கால நற்சிந்தனை

"'ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம், யாருக்கு நான் நடுங்க வேண்டும்'' சங். 26:1ஆ)

ஆண்டவரே எம் ஒளியாகவும் வழியாகவும் இருக்கும்போது நாம் அஞ்சி நடுங்கவேண்டியதில்லை. அவரின் எம் முழு நம்பிக்கையையும் விசுவாசத்தையும் வைப்போம். அவரே எமது மீட்பாக இருக்கிறார். அவருடைய இரக்கம் எமக்கு வாழ வழிகாட்டும். அவர் எமது அன்புத் தந்தையாக விளங்குகின்றார். பிள்ளைகளுக்குரிய அன்போடும் பாசத்தோடும் அவரை அண்டிச் செல்வோம்.

ஜோ. தா.

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டம்

சென்லூடஸ் (தொடமாடி) வி.க. எதிர் பாரதி திருநகர் வி. க. சென்மேரிஸ் வி க. எதிர் யாழ். பல்கலைக்கழகம் வி. க. (59)

சுவாமி விவேகானந்தர்

## நூற்றாண்டு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நூற்றாண்டு நிகழ்ச்சி பருத்தித்துறை கற்கோவளம் மெதடிஸ்தமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இம்மாதம் 7-ம் திகதி புதன்கிழமை மாலை 4-00 மணிக்கு ஊர்வலத்துடன் ஆரம்பமாகும். இவ்விழாவிற்கு அதிபர் செ. தங்கராசா தலைமை வகிப்பார். சுவாமி சித்ருபானந்தாவின் சிறப்புரையும் இடம்பெறும்.

மன்னார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் மன்னார் பகுதி முகாம்களுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

மன்னாரில் தள்ளாடியிலுள்ள படைப்பிரிவு தலைமை அலுவலகம், சிலாவத்துறை, கொக்குப்படையான், மாண்டி ஆகிய இராணுவ முகாம்களுக்கும் இவர்கள் விஜயம் மேற்கொண்டனர். (க-வி)

## 1991ல் கட்டுநாயக்காவில்
# கைதான 13 தமிழர்கள்பற்றி தகவல் பெறமுடியாதுள்ளது
## யு.என்.எச்.ஸி.ஆருக்கு முறைப்பாடு

(லண்டன்)

1991-ம் ஆண்டு கிறீஸிலிருந்து திருப்பியனுப்பப்பட்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட 13 தமிழர்கள் பற்றிய விபரம் எதுவும் பெறமுடியவில்லை என்று லண்டன் தமிழர் தகவல் நிலையம் ஐ.நா அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்திடம் முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 6ம் திகதி இந்தியாவிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட ஞானப்பிரகாசம் ஜோய் ஆனந்த் என்பவர் மன்னாரில் வைத்து கைது செய்யப்பட்டு தற்போது கொழும்பு சிறையில் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் தமிழர் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

லண்டன் தமிழர் தகவல் நிலைய செயலாளர் வி. வரதகுமார் ஜெனீவாவிலுள்ள ஐ.நா. அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் ஆணையாளர் திருமதி சடாகோ ஒவட்டாவுக்கு இது தொடர்பாக விரிவான கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். (ரி)

## எழுதுவினைஞர் பதவியுயர்வு போட்டிப் பரீட்சை

(கொழும்பு)

அரசாங்க பொது எழுதுவினைஞர் சேவையில் உள்ளோரை பதவி உயர்த்துவதற்கான போட்டி பரீட்சை அடுத்த இரு மாதங்களுள் நடாத்தப்படவுள்ளது.

வினைத்திறமைகாண் பரீட்சைக்கான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த இரு வாரங்களுள் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொது எழுதுவினைஞர் தரம் II இல் சுமார் 10 வருடகாலம் பணியாற்றியவர்கள் இயல்பாகவே தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்டவராகக் கருதப்படுவார்.

ஆனால் இந்நடைமுறை நீண்டகாலம் பின்பற்றப்படாமையாலேயே மேற்படி போட்டிப்பரீட்சையை விரைவில் நடாத்த தீர்மானிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க - சி)

## அன்னை பூபதி அஞ்சலிக்காக இன்று கடையடைப்பு

(திருநெல்வேலி)

அன்னை பூபதி நினைவாக நடைபெறும் உண்ணாவிரதத்தை முன்னிட்டு கள்ளியங்காடு வர்த்தகர் சங்கம் இன்று பூரண கடையடைப்பு நடாத்தவுள்ளது.

கள்ளியங்காடு நல்லூர் மக்கள் சந்தையும் வியாபாரம் நடைபெறமாட்டாது எனவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

அன்னை பூபதியின் நினைவாக தொடர்ச்சியாக அஞ்சலி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (157)

## இவ்வார இறுதியில்
# குமண அரச ஊழியருடன் திருமலை செல்கிறது

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் அரச ஊழியர்களை ஏற்றிக்கொண்டு திருமலை நோக்கி இவ்வார இறுதிப்பகுதியில் செல்கிறது. கொழும்பு வைத்தியசாலையில் மேலதிகமாக சிகிச்சை பெற்று சுகமடைந்த நோயாளர்களை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை திரும்பியதும் 15ம் திகதியளவில் பதிவு செய்யப்பட்ட நோயாளர்களை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிச் செல்லுமெனவும் தெரியவந்துள்ளது. இக் கப்பலில் 40 நோயாளர்கள் வரையில் செல்லலாமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (56)

## தமிழ்காங்கிரஸ் மோதிலால் ஐ.தே.க.வில் 'சேர்ந்தார்

(கொழும்பு)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவர் திரு. மோதிலால் நேரு நேற்று முன்தினம் ஐ.தே.க.வில் சேர்ந்துகொண்டார்.

மாநகர சபைத் தேர்தலில் இம்முறை கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் இவர் போட்டியிடுவாரெனவும் கட்சிவட்டாரங்கள் தெரிவித்தன. இவரது அங்கத்துவத்தை ஜனாதிபதி பிரேமதாஸா ஏற்றுக்கொண்டார்.

திரு. மோதிலால் நேரு கட்சித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலத்துடன் பலத்த கருத்துவேறுபாடு கொண்டிருந்ததும் தெரிந்ததே. (சி-சி)

## தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை—1992

தமிழ் ஆங்கில சுருக்கெழுத்துத் தட்டெழுத்திற்கான மேற்படி இறுதிப் பரீட்சைகள் 1993-04-05ம் திகதி ஆரம்பமாகின்றன. மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிக்கு தங்களுடைய மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டுடன், தங்களுக்குத் தேவையான தட்டெழுத்து நாடாவினையும் கொண்டுவருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதிபர்.

தொழில்நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(எ-3032)

## குமணவில் 115 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன

(நெல்லியடி)

குமண கப்பலில் 115 தபால் பொதிகளும் எடுத்துவரப்பட்டுள்ளதாக நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இக்கப்பலில் கொண்டுவரப்பட்ட பொருட்களின் விபரம்: அரிசி 1000 மெ. தொன், மா 500 மெ. தொன், சீனி 300 மெ. தொன், மைசூர் பருப்பு 50 மெ தொன், பாமா 50 மெ. தொன் மல்லி 10 மெ. தொன், பெ. சீரகம் 10 மெ. தொன், சவர்க்காரம் 20 மெ. தொன், நற்சீரகம் 10 மெ. தொன் நானாவித பொருட்கள் 580 மெ. தொன், டீசல் 4-40 மெ. தொன். மண்ணெண்ணெய் 2.06 மெ தொன்

இவற்றுடன் 45 மெ.தொன் மருந்து வகைகளும், யாழ். தனியார் வர்த்தக நிலையங்களுக்கு உணவுப்பொருட்களும், வடமாநில கல்வித் திணைக்களத்திற்கு பாடசாலை தளபாடங்களும் கொண்டுவரப்பட்டன.

பொருட்களை இறக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பமானது. (160)

### புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிருஸ்ணபிள்ளை கிடி (புலோலி) கிருஸ்ணபிள்ளை இன்பரதன் (வல்வெட்டித்துறை) சுந்தரம் அமாதாஸ் (வதிரி) சுந்தரம் சந்திரன் (வதிரி) ஆகியோருடன் வடமராட்சியைச் சேர்ந்த மற்றுமொரு தமிழ் இளைஞரும் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (56 - ரி)

### வலிகாமத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் தடைகளை அகற்றுவதற்காக முன்னேறி வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாது பலத்த இழப்புகளுடன் முகாம் திரும்பினர்.

நேற்றுக்காலை 7-30 மணியளவில் கட்டுவன் பகுதி காவரணிலிருந்து தடைகளை அகற்றவென சுமார் 200 யார் தொலைவிற்கு முன்னேறிய படையினரை நோக்கி விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் தொடுத்தனர்.

விடுதலைப் புலிகளின் உக்கிர தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாத படையினர் இழப்புகளுடன் பின்வாங்கினர்.

இதேவேளை பலாலி இராணுவ முகாமிலிருந்து பலத்த ஷெல் தாக்குதலும், ஹெலிகொப்டரிலிருந்து 50 கலிபர் தாக்குதலும் முற்பகல் 11மணி வரை கடுமையாக மேற்கொள்ளப்பட்டன. (க-ரி-56)

### க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். மாவட்ட முன்னணிப் பாடசாலைகள் பெற்ற பெறுபேறுகள் வருமாறு:

யாழ். இந்துக் கல்லூரி:- வி. சஞ்சீவன் 8 டி, க. செந்தூரன் 8 டி. அ. சுஜாதரன் 8 டி, சி சுதர்சன் 8 டி, இ. திருமாறன் 8 டி, யோ. உருத்திரா 8 டி, அ. டொமினிக் 8 டி. 7 டி 15 பேர், 6 டி 21 பேர்

புனித பரியோவான் கல்லூரி:- ஜி. வசந்தகுமார் 8டி, எஸ் பிரசாந்தன் 8 டி. 7 டி, சி 9 பேர், 6 டி, 2 சி 10 பேர்.

புனித சம்பத்திரிசியார் கல்லூரி:- எம். எஸ். கிறிஸ்தோபல் 8 டி, கே. யூட்திரோன் 8 டி, 7 டி ஒருவர், 6 டி ஒருவர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி:- பா. மயூரன் 8 டி, ச. சுரேஷ்குமார் 8 டி, 7 டி ஒருவர், 6 டி நாலு பேர்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி:- தி மதுரா 8 டி, 7 டி இருவர். 6 டி இருவர்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி: 7 டி எட்டுப்பேர் 6 டி ஒன்பது பேர். திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கிலம்:- 5 டி ஒருவர், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி:- 7 டி ஒருவர், 6 டி எட்டுப்பேர்.

கனகரெத்தினம் மத்திய மகா வித்தியாலயம்:- 5 டி 4 பேர், யாழ் மத்திய கல்லூரி:- 6 டி ஒருவர், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி:- 3 டி ஒருவர், யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரி:- 3 டி ஒருவர், (158, 157, 159)

## ஹாட்லி மாணவன் 8 பாடங்களில் அதிவிசேட சித்தி

(நெல்லியடி)

வடமராட்சிக் கோட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் செல்வன் விஜயாலயன் சிவப்பிரகாசம் 8 டி பெற்றுள்ளார். இதே கல்லூரியில் 6 மாணவர்கள் 6 டியும், 8 மாணவர்கள் 6 டியும் பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியில் செல்வி கோசலை இராமநாதன் என்னும் மாணவி 7 டி பெற்றுள்ளார். அத்துடன் இரு மாணவிகள் 5 டியும், செல்வி மதிவதனி தியாகராசா 6 டியும், 13 மாணவிகள் 4 டியிலும், சித்தியடைந்துள்ளனர். பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் 5 மாணவர்கள் 4 டியும் பெற்றுள்ளனர். (160)

### தடுப்பு முகாம்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டது.

உண்ணாவிரதமிருப் போரின் உடல்நிலை மற்றும் அவர்களின் பாதுகாப்பு குறித்து ஆராயும் பொருட்டே இக்குழுவினர் விஜயம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (க - சி)

### காலி பூஸா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருதய பலவீனம், மற்றும் உணவுப் பற்றாக்குறையால் இவர்கள் பாதிக்கப்பட்டதாலேயே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

பூஸா தடுப்பு முகாமில் 164 பேர் கடந்த வாரம் முதல் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

எதுவித விசாரணைகளும் இன்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே இவர்கள் மேற்படி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இவர்களுக்கு ஆதரவாக மூன்று தடுப்பு முகாம்களிலும் உள்ள மேலும் 800 பேர் உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளனர்.

பன்னேகல, திறந்த மற்றும் புனர்வாழ்வு சிறையிலிருந்த 164பேரும்பெலவத்தை தடுப்பு முகாமிலிருந்து 74 பேரும் இவ் உண்ணாவிரதப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

3000 பேர் வரையில் தடைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக இவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுள் பெரும்பாலானோர் 1988–1989ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.வி.பி.யினர் நடத்திய கிளர்ச்சியில் கலந்து கொண்டவர்கள் என்ற விசேட அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுள் பலர் ஜே. வி. பி யினருக்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டுதல் என்ற சிறிய குற்றங்களுக்காகவும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தடுப்புமுகாம்களில் உண்ணாவிரதம் இருப்போர் துக்கம் காரணமாக வெள்ளைக் கொடிகளை பறக்க விட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் பலர் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்ளக்கூடும் என்றும் அரசின் நேரடி தலையீட்டிற்கு இதுவழி வகுக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு-ரி-க)

### ஐ. தே. க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரங்களை தாக்கல் செய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரையில் மாகாண சபைத் தேர்தலுக்கான சுயேட்சை குழு ஒன்று தனது வேட்பாளர்களின் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளது

இதேவேளை இன்று மேலும் பலர் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (சி-ரி)

### குடியிருப்புக்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழாலை விளான் பகுதிகளில் படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். தோட்டப்பகுதிகளிலும், முன்னர் மக்கள் இடம்பெயர்ந்திருந்தமையினால் வெறுமனாக உள்ள வீடுகளிலும் இச்ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டினால் இளைஞர் ஒருவர் பலத்த காயத்திற்குள்ளானார் ஏழாலை மத்தியைச் சேர்ந்த புவனேந்திரன் பாஸ்கரன் (20 வயது) என்பவரே பலத்த காயத்திற்குள்ளாகிய நிலையில் யாழ் பெரிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56-சி)

### தடுப்புக் காவலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1990ம் ஆண்டு வந்தாறுமூலை, கொட்டடியார்பட்டு, சத்துருக்கொண்டான், திட்டுவெட்டுவான்' மயிலந்தனை ஆகிய பகுதிகளிலிருந்து கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களே இவ்வாறு சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவருவதாகவும் எனினும் இவர்களின் கதி என்னவென்றே தெரியவில்லையென்றும்பெரும்பாலும் இவர்கள் இறந்திருக்கலாம் என்றும் அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மனித உரிமைகள் சாசனத்தின் கீழ் விடுதலை செய்யப்படவேண்டும். அல்லது நீதிமன்றின் முன் கொண்டு வந்து விசாரிக்கப்படவேண்டும் என்றும் அவ் நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது. (க-ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட்டுக்காக தொலைபேசி ..., யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ். வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Srilanka under license Number B/10336/N